08.02.16

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### நபார்டு வங்கி மூலம் விவசாயிகள் ஒருங்கிணைப்பு கம்பெனிச் சட்டத்தின் கீழ் பதிவு



மதுரை: மதுரை மாவட்டத்தில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், கம்பெனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு உள்ளன. இதன்மூலம் விவசாயிகள் சுயமாக பொருட்களை விற்கவும், இடுபொருட்களை வாங்கவும் முடியும்.

நபார்டு திட்டத்தின் கீழ் தாலுகாக்களில் உள்ள விவசாயிகள் அந்தந்த பகுதிகளில் ஒருங்கிணைக்கப்பட்டு உழவர் மன்றங்கள் அமைக்கப்படுகின்றன. மன்றத்திற்கு 20 விவசாயிகள் வீதம் மதுரையில் 400 மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அடுத்தகட்டமாக மன்ற விவசாயிகள் ஒருங்கிணைக்கப்பட்டு 10 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றிலும் 500 விவசாயிகள் உள்ளனர். இரண்டு நிறுவனங்கள் கம்பெனி சட்டத்தின் கீழ் பதிவும் செய்யப்பட்டுள்ளன.

இதுகுறித்து நபார்டு வங்கி உதவிப் பொது மேலாளர் மகேஷ் கூறியதாவது டி.கல்லுப்பட்டி, பேரையூரில் உள்ள நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு அதிலுள்ள உறுப்பினர்கள் தலா ரூ.1000 முதலீடு செய்வர். 500 உறுப்பினர்கள் இருந்தால் ரூ.5 லட்சம் வசூலாகும். இதற்கு ஈடான தொகை மத்திய அரசால் நிறுவனத்திற்கு வழங்கப்படும். இதைக் கொண்டு உரக்கடை அமைக்கலாம். மொத்தமாக தரமான உரம் வாங்கி தேவைக்கேற்ப விவசாயிகளுக்கு வழங்கலாம். விவசாயக் கடன் வழங்கலாம். விவசாயிகளே விலையை நிர்ணயம் செய்து வியாபாரிகளுக்கு நல்ல விலைக்கு விற்கலாம். தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு நபார்டு வங்கி நிதியுதவி செய்யும், என்றார்.

**பழநியில் தள்ளாடுது தக்காளி: கிலோ ரூ.4க்கு விற்பனை**



தக்காளிவரத்து அதிகரிப்பால் விலை வீழ்ச்சியடைந்து ஒரு கிலோ ரூ.4 முதல் ரூ.7 வரை விற்கப்படுகிறது. உழவர்சந்தைக்கு வழக்கத்திற்கு அதிகமாக தினமும் 1000 கிலோ கூடுதலாக விற்பனைக்கு வருகிறது. திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், பழநி, உடுமலைபேட்டை, பொள்ளாச்சி உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் தக்காளிசாகுபடி செய்கின்றனர். இவை கேரளா, ஆந்திராவுக்கு ஒசூர் மார்க்கெட் மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது. பழநி பகுதியில் தக்காளி விளைச்சல் அதிகரித்துள்ளது.

இதனால் மார்க்கெட்டில் பெட்டி (15கிலோ) ரகத்திற்கு ஏற்றாற் போல ரூ.65முதல் ரூ.80 வரை விற்கின்றனர், பழநி உழவர் சந்தையில் கிலோ ரூ.4 முதல் ரூ.7 வரை விற்கப்படுகிறது. விளைச்சல் அதிகரித்தபோதும் எதிர்பார்த்த விலை கிடைக்காததால் சிலவிவசாயிகள் தக்காளியை பறிக்காமல், செடியிலேயே விட்டுள்ளனர்.உழவர்சந்தை அதிகாரி ஒருவர் கூறுகை யில்,“கடந்த 2 வாரங்களாக தக்காளிவரத்து அதிகரித்து விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. உழவர்சந்தைக்கு வழக்கமாக தினமும் 1,500கிலோ வரும். தற்போது 2500 கிலோ வருகிறது. தரமான தக்காளி ரூ.4 முதல் ரூ.7 விற்கப்படுகிறது. சற்று சுமாரான தக்காளியை வாங்கஆள் இல்லாததால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் ,” என்றார்.

**கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்கள்: பலன் கிடைக்குமா**

'தமிழகம் முழுவதும், கூடுதல் நெல் கொள்முதல் மையங்கள் திறக்கப்படும்' என்ற அரசு உத்தரவிற்கு, பலன் கிடைக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

டெல்டா மாவட்டங்களில், 12 லட்சம் ஏக்கர், மற்ற மாவட்டங்களில், 28 லட்சம் ஏக்கர் என, 40 லட்சம் ஏக்கரில், இந்த ஆண்டு சம்பா சாகுபடி நடந்துள்ளது. டெல்டா மாவட்டங்களில், நெல் கொள்முதல் செய்ய, நுகர்பொருள் வாணிப கழகம் மூலம், 1,292 கொள்முதல் மையங்கள் உள்ளன.

மற்ற மாவட்டங்களில், கூட்டுறவு துறை மூலம், 61 இடங்களில் கொள்முதல் மையங்கள் செயல்படுகின்றன. இது வரை, டெல்டா மாவட்டங்களில், 3 லட்சம் டன், மற்ற மாவட்டங்களில், 1 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

அரசு கொள்முதல் மையங்கள் அருகில் இல்லாததால், வியாபாரிகள் மற்றும் கமிஷன் ஏஜன்ட்களிடம், பிற மாவட்ட விவசாயிகள் நெல்லை விற்று விட்டனர். தற்போது தான், மற்ற மாவட்டங்களில் கூடுதல் கொள்முதல் மையங்கள் திறக்க அரசு உத்தரவிட்டுள்ளது. --- நமது நிருபர்- - -

**அறுவடை பருவத்தில் 87 சதவீதம் இழப்பு**

கலபுரகி:பருவ மழை பொய்த்ததால், விதைப்பு பருவத்தில் ஏற்பட்ட இழப்பு போலவே, அறுவடை பருவத்திலும் கலபுரகி விவசாயிகளுக்கு, 87.58 சதவீதம் இழப்பு ஏற்பட்டுள்ளது. விவசாய துறை, கடந்த, 4ம் தேதி முதற் கட்டமாக ஆய்வு செய்தபோது, கலபுரகி மாவட்டத்தில், 12.55 லட்சம் ஏக்கரில் விதைப்பு பணிகள் நடந்திருப்பது தெரிய வந்தது. இதில், மழையின்றி வறண்டதால், 9.83 லட்சம் ஏக்கர் பயிர் காய்ந்து கருகியது தெரிந்தது. இதனால், 87.58 சதவீதம் பயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாய துறை மதிப்பிட்டுள்ளது.

* சோளம் விதைப்பதற்காக, 6.15 லட்சம் ஏக்கரில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில், 4.99 லட்சம் ஏக்கரில் மட்டுமே விதைப்பு பணிகள் நடந்தன. அறுவடை நேரத்தில், 4.33 லட்சம் ஏக்கர் பயிர் நாசமாயின

* கோதுமை பயிரிட, 39.5 ஆயிரம் ஏக்கரில் இலக்கு நிர்ணயித்து, 19,583 ஏக்கரில் மட்டுமே விதைப்பு நடைபெற்று, அதிலும் 15,080 ஏக்கர் கோதுமை பயிர் கருகின

* துவரை மைசூர் பருப்பு, இலக்கு நிர்ணயிக்கப்பட்ட 5.09 லட்சம் ஏக்கரில், 4.8 லட்சம் ஏக்கரில் மட்டுமே விதைக்கப்பட்டு, 4.3 லட்சம் ஏக்கர் பயிர் நாசமடைந்தது

* கொள்ளு, இலக்கு நிர்ணயிக்கப்பட்ட, 494 ஏக்கரில் பயிரிட, 190 ஏக்கரில் விதைக்கப்பட்டு, அதிலும், 165.5 ஏக்கர் பயிர் நாசமடைந்தது

* சூரியகாந்தி, 67,325 ஏக்கரில் பயிரிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 89,279 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டு, 79,837 ஏக்கர் சூரியகாந்தி பயிர் கருகின.

இந்த ஆய்வறிக்கை, அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஏற்கனவே, 12.6 லட்சம் ஏக்கர் பயிர், விதைப்பு முடிந்த நிலையில், தண்ணீரின்றி, முழுவதுமாக நாசமடைந்தது குறிப்பிடத்தக்கது.

**கடல் மீன்களின் விலை தங்கமாக உயருது! ஒரே ஆண்டில் 2 மடங்கு கூடியது**

பொள்ளாச்சி பகுதியில் விற்பனையாகும் கடல் மீன்கள், கடந்த ஆண்டை விட இரு மடங்கு விலையுயர்ந்துள்ளது அசைவப் பிரியர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

பொள்ளாச்சி பகுதிக்கு கேரளா, ராமேஸ்வரத்திலிருந்து மீன்களை, விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.கடந்த ஆறு மாத காலமாக, கொஞ்சம் கொஞ்சமாக மீன் விலை உயரத்துவங்கி, தற்போது கடந்த ஆண்டின் விலை நிலவரத்தை விட ஏறத்தாழ இருமடங்கு விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் கேரள கடல் பகுதிகளில், மீன்களின் இனப்பெருக்கத்திற்காக, மீன் பிடி தடை காலம் அடுத்தடுத்து அறிவிக்கப்பட்டது, தமிழக கடல்களில், தொடர்ந்து ஏற்பட்ட புயல், என பல்வேறு காரணங்களால், இதன் வரத்து குறைந்து விட்டது. முக்கியமாக, தமிழக மீனவர்களை இலங்கை கடல் படையினர் தொடர்ந்து தாக்கி வருகின்றனர். இதற்கு எதிராக, தமிழக மீனவர்கள் அடிக்கடி கடலுக்கு செல்லாமல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் காரணமாகவும் மீன்வரத்து பெருமளவு பாதிக்கப்படுகிறது. கிடைக்கும் மீன்களும், முதலில் வெளிநாட்டு ஏற்றுமதிக்கு வாங்கி செல்லப்பட்டு விடுகிறது. இதனால் பொள்ளாச்சி பகுதிக்கு அனுப்பப்படும் மீன்கள், கணிசமாக குறைந்து போயுள்ளது.

வரத்து தொடர்ந்து குறைவதால், விலை ஏற்றம் அடிக்கடி நடந்தது. இதன் காரணமாக, கடந்த ஆண்டு ஒரு கிலோ 80-90 ரூபாய்க்கு விற்பனையான மத்தி மீன், தற்போது 170-200 ரூபாய் வரை விலையேறி, மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்துகிறது. கடந்த ஆண்டு 300-350க்கு விற்பனையான வஞ்சிரம், 600க்கும், 250-300க்கு விற்பனையான ஊழி, 400க்கும், 300க்கு விற்பனையான வாவல், 450க்கும், 150க்கு விற்பனையான சங்கரா, 250க்கும், 150க்கு விற்பனையான அயிலை, 220க்கும், 170 வரை விற்பனையான நெத்திலி, 250க்கும், 200க்கு விற்பனையான விளை, 350க்கும், 400க்கு விற்பனையான முதல் தர இறால், 600 வரையும் விற்பனையாகி வருகிறது. கடல் மீன்களின் விலையேற்றத்தால்,

மீன் பிரியர்கள் பலரும், டேம் மீன்களின் பக்கம் திரும்பியுள்ளனர். இதனால், கட்லா, ஜிலேபி உள்ளிட்ட டேம் மீன் ரகங்களும் 20 சதவீதம் வரை விலையர்ந்துள்ளது.

இப்படி கடல் மீன்கள், ஒரே ஆண்டில் இரு மடங்கு விலையுயர்ந்துள்ளது, மீன் உணவு பிரியர்களை, மீன் உண்ண தயங்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. விலை குறைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் அதிகரித்துள்ளது.

## வீட்டு காலியிடத்தில் பட்டுப்புழு வளர்ப்பு இல்லத்தரசிகள் வருவாய் ஈட்ட வாய்ப்பு

வீட்டை சுற்றியுள்ள காலியிடத்தில் மல்பெரி மரம் நட்டால், குறுகிய காலத்திலே புழு வளர்ப்பில் ஈடுபட்டு, கணிசமான தொகையை வருவாக ஈட்டலாம். இதற்கு செலவினங்கள் குறைவாக இருப்பதோடு, இலவச பயிற்சிகளும் அளிக்கப்படுவதாக, அதிகாரிகள் தெரிவித்தனர்.

வெண்பட்டுக்கூடுகளுக்கான தேவை அதிகமுள்ளதால், பட்டுப்புழு வளர்ப்பு தொழிலுக்கு அதிக மவுசு உண்டு. இளம்புழுக்கள், 15 நாட்களிலே கூடுகளை உருவாக்கி விடுவதால், மாதந்தோறும் கணிசமான தொகையை, வருவாயாக ஈட்டலாம். இத்தொழிலுக்கு, மத்திய, மாநில அரசுகள் சார்பில், நாற்று நடவு, மருந்து தெளிப்பு, புழு வளர்ப்பு தளவாடங்கள் வாங்குதல், சொட்டு நீர் பாசனம் உள்ளிட்ட, பல்வேறு செயல் பாடுகளுக்கு ஆகும் செலவில், 80 சதவீத அளவுக்கு, மானிய உதவிகளும் உண்டு. மல்பெரி வளர்க்க இடமிருந்தால் மட்டுமே, கூடு உற்பத்தியில் ஈடுபட முடியும் என்ற, நிலை இருந்து வந்தது. இதனால், நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் மட்டுமே, பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். கோவை மாவட்டத்தில், 1,485 ஏக்கர் நிலப்பரப்பில், மல்பெரி சாகுபடி நடக்கிறது. பட்டுப்புழு வளர்ப்பில், 811 விவசாயிகள் ஈடுபடுகின்றனர். இதை மாற்று விவசாயத்தொழிலாக செய்து வருகின்றனர். ஆனால், தற்போது நகர்புறங்களிலும் மல்பெரி மரம் நட்டு, புழு வளர்ப்பில் ஈடுபட, இல்லத்தரசிகள், பணிக்கு செல்வோருக்கு அரிய வாய்ப்பு

காத்திருக்கிறது. வீட்டின் முன், பின் உள்ள காலியிடங்களில், மல்பெரி மரத்தை நட்டு, புழு வளர்க்கலாம். இதற்கு, ஐந்தடிக்கு ஒரு மரக்கன்று நடுவதோடு, 50 சதுர அடி பரப்புக்கு, புழு வளர்க்க பிரத்யேக இடம் இருந்தாலே போதுமானது. இது, வீட்டிலுள்ள ஒரு பயன்படுத்தாத அறையாக கூட இருக்கலாம்.

மல்பெரி செடி நட்டு, ஆறு மாத காலத்திலே, புழு வளர்க்க துவங்கிவிடலாம். ஒரு மரக்கன்றின் இலைகளை, ஒரு முட்டை தொகுதிக்கு அளித்தால், மாதந்தோறும் கணிசமாக ஒரு கிலோ எடையுள்ள கூடுகளை, உற்பத்தி செய்ய முடியும். மரக்கன்றின் எண்ணிக்கைக்கு தகுந்தபடி, கூடு உற்பத்தி

அளவீடு இருக்கும். பட்டுவளர்ச்சி துறை அதிகாரி ஒருவர் கூறுகையில்,"மரவகைப்பயிரான மல்பெரியின் ஆயுட்காலம், 15 ஆண்டுகள். இதன் நாற்று ரகங்கள், புழக்கத்தில் உள்ளன. வீட்டின் முன்பு, நான்கு மரங்களை நட்டாலே, மாதத்திற்கு 1,600 ரூபாய் வரை வருவாய் ஈட்டலாம். மரம் வளர வளர, வாங்கும் முட்டைத்தொகுதிகளின் எண்ணிக்கையும் அதிகப்படுத்தினால், கணிசமான தொகையை லாபமாக பெறலாம். இதில், முட்டை தொகுதி மற்றும் மருந்து தெளிப்பு செலவினங்களுக்காக, சொற்ப தொகை மட்டுமே செலவிட வேண்டியிருக்கும். புழுக்களுக்கு, அதிகாலை மற்றும் மாலை நேரங்களில் மட்டும், உணவளித்தால் போதும். இதுதொடர்பான பயிற்சி, இலவசமாக அளிக்கப்படுகிறது. கூடுதல் தகவலுக்கு, பாலசுந்தரம் ரோட்டில் உள்ள, பட்டு வளர்ச்சித்துறை அலுவலகத்தை நேரில் தொடர்பு கொள்ளலாம்," என்றார்.

## வெள்ளைபூசணி விலை வீழ்ச்சி: அறுவடை செய்ய தயக்கம்

முதுகுளத்தூர் : விளைச்சல் அதிகரித்தபோதிலும் விலை வீழ்ச்சி அடைந்ததால் முதுகுளத்தூர் பகுதியில் வெள்ளை பூசணிக்காய்களை அறுவடை செய்ய விவசாயிகள் தயக்கம் காட்டுகின்றனர். இதனால் அவை வயல்களிலேயே வீணாகி வருகின்றன. முதுகுளத்தூர் அருகே வளநாடு, பூசேரி, கடம்போடை, தேரிருவேலி, காக்கூர் உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் வெள்ளை பூசணிக்காய் சாகுபடி செய்யபட்டுள்ளது. இந்த ஆண்டு பூசணிக்காய்

அமோகமாக விளைந்துள்ளது. தற்போது அறுவடை தருவாயில் உள்ளன. சமீபகாலமாக வரத்து அதிகரிப்பால் காய்கறிகள் விலை சரிந்துள்ளது. இதனால் வெள்ளைபூசணி விலையும் வீழ்ச்சி அடைந்துள்ளது. கிலோ ரூ.20 க்கு விற்பனையான பூசணிக்காய், தற்போது 20 கிலோ ரூ.10 க்கு கூட வாங்க ஆளில்லாத நிலை உள்ளது. கூலி கூட கட்டுப்படியாகாததால் பூசணிக்காய்களை அறுவடை செய்யாமல் அப்படியே விவசாயிகள் விட்டுவிட்டனர். வயலிலேயே பூசணிக்காய் முற்றி அழுகி வீணாகி வருகின்றன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்தனர். வளநாடு விவசாயி சாத்தையா கூறியதாவது: கார்த்திகை, மார்கழி மாதங்களில் பூசணிக்காய் நல்ல விலை கிடைத்தது. இதனால் அதிகளவில் பூசணிக்காயை பயிரிட்டோம். தற்போது 20 கிலோ பூசணிக்காயை ரூ.10 க்கு கூட விற்க முடியவில்லை. பூசணிக்காயை அறுவடை செய்து சரக்கு வாகனங்களில் மார்க்கெட்டிற்கு கொண்டு செல்ல வேண்டும். விலை இல்லாததால் வாகன வாடகை, பறிப்பு கூலிக்கு கூட கட்டுப்படியாகாது. இதனால் அவற்றை அப்படியே நிலங்களிலேயே விட்டுவிட்டோம். ஒரு ஏக்கருக்கு ரூ.35 ஆயிரம் இழப்பு ஏற்பட்டுள்ளது," என்றார்.

**ஐந்து தாலுகாவில் நெல் கொள்முதல் நிலையம்**

சேலம்: சேலம் மாவட்டத்தில், ஐந்து தாலுகாவில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க மாவட்ட நிர்வாகம் முடிவு செய்துள்ளது. சேலம் கலெக்டர் அலுவலகத்தில், கலெக்டர் மற்றும் நுகர்பொருள் வாணிப கழகம், வேளாண் துறை, கூட்டுறவுத்துறை அதிகாரிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் நடந்தது. கூட்டத்தில், விவசாயிகளுக்கு நெல்லுக்கு உரிய விலை கொடுக்கும் பொருட்டு, தமிழக முதல்வர், மத்திய அரசு நிர்ணயிக்கும் கொள்முதல் விலையை விட, அதிக விலையை நிர்ணயம் செய்துள்ளார். அதன்படி, சாதாரண நெல் குவிண்டால் ஒன்றுக்கு, 1,460 ரூபாய், சன்னரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு, 1,520 ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது. சேலம் மாவட்டத்தில், சங்ககிரி தாலுகா, தேவூர் கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு, 68 மெட்ரிக் டன் நுகர்பொருள் வாணிப கழகத்தால்

கொள்முதல் செய்யப்பட்டது. நெல் விளைச்சல் அதிகமாக உள்ள, ஓமலூர் தாலுகா, காடையாம்பட்டி, இடைப்பாடி தாலுகா, பூலாம்பட்டி, சங்ககிரி தாலுகா, தேவூர் மற்றும் ஆத்தூர், கெங்கவல்லி தாலுகாக்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்க முடிவெடுக்கப்பட்டது. நுகர்பொருள் வாணிப கழகத்தினரும், வேளாண்மை துறையினரும், நெல் கொள்முதல் நிலையம் அமைப்பதற்கான இடத்தை தேர்வு செய்து, அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும். ஒப்புதல் கிடைத்தவுடன் நெல் கொள்முதல் நிலையம் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

**வீட்டு காலியிடத்தில் பட்டுப்புழு வளர்ப்பு இல்லத்தரசிகள் வருவாய் ஈட்ட வாய்ப்பு**

வீட்டை சுற்றியுள்ள காலியிடத்தில் மல்பெரி மரம் நட்டால், குறுகிய காலத்திலே புழு வளர்ப்பில் ஈடுபட்டு, கணிசமான தொகையை வருவாக ஈட்டலாம். இதற்கு செலவினங்கள் குறைவாக இருப்பதோடு, இலவச பயிற்சிகளும் அளிக்கப்படுவதாக, அதிகாரிகள் தெரிவித்தனர்.

வெண்பட்டுக்கூடுகளுக்கான தேவை அதிகமுள்ளதால், பட்டுப்புழு வளர்ப்பு தொழிலுக்கு அதிக மவுசு உண்டு. இளம்புழுக்கள், 15 நாட்களிலே கூடுகளை உருவாக்கி விடுவதால், மாதந்தோறும் கணிசமான தொகையை, வருவாயாக ஈட்டலாம். இத்தொழிலுக்கு, மத்திய, மாநில அரசுகள் சார்பில், நாற்று நடவு, மருந்து தெளிப்பு, புழு வளர்ப்பு தளவாடங்கள்

வாங்குதல், சொட்டு நீர் பாசனம் உள்ளிட்ட, பல்வேறு செயல்

பாடுகளுக்கு ஆகும் செலவில், 80 சதவீத அளவுக்கு, மானிய உதவிகளும் உண்டு. மல்பெரி வளர்க்க இடமிருந்தால் மட்டுமே, கூடு உற்பத்தியில் ஈடுபட முடியும் என்ற, நிலை இருந்து வந்தது. இதனால், நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் மட்டுமே, பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். கோவை மாவட்டத்தில், 1,485 ஏக்கர் நிலப்பரப்பில், மல்பெரி சாகுபடி நடக்கிறது.

பட்டுப்புழு வளர்ப்பில், 811 விவசாயிகள் ஈடுபடுகின்றனர். இதை மாற்று விவசாயத்தொழிலாக செய்து வருகின்றனர். ஆனால், தற்போது நகர்புறங்களிலும் மல்பெரி மரம் நட்டு, புழு வளர்ப்பில் ஈடுபட, இல்லத்தரசிகள், பணிக்கு செல்வோருக்கு அரிய வாய்ப்பு காத்திருக்கிறது. வீட்டின் முன், பின் உள்ள காலியிடங்களில், மல்பெரி மரத்தை நட்டு, புழு வளர்க்கலாம். இதற்கு, ஐந்தடிக்கு ஒரு மரக்கன்று நடுவதோடு, 50 சதுர அடி பரப்புக்கு, புழு வளர்க்க பிரத்யேக இடம் இருந்தாலே போதுமானது. இது, வீட்டிலுள்ள ஒரு பயன்படுத்தாத அறையாக கூட இருக்கலாம். மல்பெரி செடி நட்டு, ஆறு மாத காலத்திலே, புழு வளர்க்க துவங்கிவிடலாம். ஒரு மரக்கன்றின் இலைகளை, ஒரு முட்டை தொகுதிக்கு அளித்தால், மாதந்தோறும் கணிசமாக ஒரு கிலோ எடையுள்ள கூடுகளை, உற்பத்தி செய்ய முடியும். மரக்கன்றின் எண்ணிக்கைக்கு தகுந்தபடி, கூடு உற்பத்தி அளவீடு இருக்கும். பட்டுவளர்ச்சி துறை அதிகாரி ஒருவர் கூறுகையில்,"மரவகைப்பயிரான மல்பெரியின் ஆயுட்காலம், 15 ஆண்டுகள். இதன் நாற்று ரகங்கள், புழக்கத்தில் உள்ளன. வீட்டின் முன்பு, நான்கு மரங்களை நட்டாலே, மாதத்திற்கு 1,600 ரூபாய் வரை வருவாய் ஈட்டலாம். மரம் வளர வளர, வாங்கும் முட்டைத்தொகுதிகளின் எண்ணிக்கையும் அதிகப்படுத்தினால், கணிசமான தொகையை லாபமாக பெறலாம். இதில், முட்டை தொகுதி மற்றும் மருந்து தெளிப்பு செலவினங்களுக்காக, சொற்ப தொகை மட்டுமே செலவிட வேண்டியிருக்கும். புழுக்களுக்கு, அதிகாலை மற்றும் மாலை நேரங்களில் மட்டும், உணவளித்தால் போதும். இதுதொடர்பான பயிற்சி, இலவசமாக அளிக்கப்படுகிறது. கூடுதல் தகவலுக்கு, பாலசுந்தரம் ரோட்டில் உள்ள, பட்டு வளர்ச்சித்துறை அலுவலகத்தை நேரில் தொடர்பு கொள்ளலாம்," என்றார்.

## 9 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில், ஒன்பது இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளது," என, கலெக்டர் கதிரவன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கூட்டுறவு சங்கம் மூலமாக காவேரிப்பட்டணம், மலையாண்டஅள்ளி, பாரூர் ஆகிய மூன்று இடங்களிலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலமாக பெரியமுத்தூர், மாதேப்பட்டி, பையூர், நெடுங்கல், போச்சம்பள்ளி, கால்வேஅள்ளி ஆகிய ஆறு இடங்கள் என, மொத்தம் மாவட்டத்தில், ஒன்பது இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட உள்ளது. ஏ கிரேடு (சன்னரக நெல்) குவிண்டாலுக்கு, 1520 ரூபாய், (பொது ரகம்) குவிண்டாலுக்கு, 1460 ரூபாய் என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நீண்ட தூரம் சென்று விற்பனை செய்யும் நிலை மாறி, கிருஷ்ணகிரி மாவட்டத்திலேயே நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட உள்ளது. இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## பசுந்தேயிலைக்கு விலையேற்றம்

மஞ்சூர் n மஞ்சூர் கூட்டுறவு தொழிற்சாலையில், பசுந்தேயிலை கிலோவுக்கு, 17 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் செயல்பட்டு வரும் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைக்கான மாதாந்திர விலை நிர்ணயம், குன்னுார் இன்கோ சர்வ் அலுவலகத்தில் நடந்தது. ஜனவரி மாதத்திற்கான விலை நிர்ணயத்தில், அதிகபட்சம் மஞ்சூர், கைக்காட்டி கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைக்கு கிலோவுக்கு அதிகபட்சம், 17 ரூபாய்; எடக்காடு, பந்தலுார், கரும்பாலம், சாலிஸ்பரி தொழிற்சாலைகளில் கிலோவுக்கு, 15 ரூபாய்; கிண்ணக்கொரை, பிக்கட்டி, இத்தலார், மேற்குநாடு உள்ளிட்ட கூட்டுறவு தொழிற்சாலைகளில் கிலோவுக்கு,14.50 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## நெல் கொள்முதல் நிலையம் திறப்பு: 17 சதவீதம் ஈரப்பதம் முக்கியம்

கரூர்: இன்று முதல் ஆறு இடங்களில் நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் மண்டல மேலாளர் பாபு வெளியிட்ட அறிக்கை: தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தால் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம், அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச ஆதார விலை மற்றும் ஊக்கத் தொகையும் சேர்த்து நெல் கிரேடு, 'ஏ' ரகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு, 1,520 ரூபாய், பொது ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு, 1,460 ரூபாய் வழங்கப்படுகிறது. மேலும் அதற்குண்டான தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில், மின்னணு தீர்வு திட்டத்தின் மூலம் செலுத்தப்பட உள்ளது. இதன்படி மாவட்டத்தில் நேரடிக் கொள்முதல் நிலையங்கள் சுக்காலியூர், சின்னதாராபுரம், நச்சலூர் , கோவக்குளம், கட்டளை, பள்ளாபாளையம் ஆகிய, ஆறு இடங்களில், இன்று முதல், (8ம் தேதி) திறக்கப்படுகிறது. இங்கு, 17 சதவீதம் ஈரப்பதத்துடன் அனுமதிக்கப்பட்டுள்ள திரிபுகளுக்கு மிகாமல் உள்ள நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்படும். எனவே, விவசாயிகள் தங்களது நெல்லினை கொள்முதலுக்கு கொண்டு வரும் போது மேற்குறிப்பிட்டுள்ள ஈரப்பதத்துடனும் தங்களது வங்கிக் கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகலுடனும் வர வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## குலை நோய் தாக்குதல் நெல் பயிர்கள் பாதிப்பு

வடமதுரை வட்டாரத்தில் நெல் பயிரில் குலை நோய் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. நெல் பயிரின் இலைகள், தண்டு, கணுப்பகுதி, கழுத்துப்பகுதி, கதிர் என அனைத்து பகுதிகளும் பூசனத்தால் தாக்கப்பட்டிருக்கும். இலைகளின் மேல் வெண்மை நிறத்திலிருந்து சாம்பல் நிற மைய பகுதியுடன் காய்ந்த ஓரங்களுடன் கூடிய கண் வடிவ புள்ளிகள் காணப்படும். பல புள்ளிகள் ஒன்று சேர்ந்து பெரிய ஒழுங்கற்ற திட்டுக்களை உருவாக்கும். தீவிர தாக்குதலின் போது பயிர் முழுவதும் எரிந்தது போன்ற தோற்றமளிக்கும். இதையே "குலை நோய்' என்கிறோம். கதிர் வெளிவந்தவுடன் பயிர்கள் சாய்ந்துவிடும். இதனை

கட்டுப்படுத்த ஒரு கிராம் டிரைலைசோல் மருந்தை தண்ணீரில் கலந்து, காலை 11 மணிக்கு முன்னதாகவும், மதியம் 3 மணிக்கு பின்பும் தெளிக்க வேண்டும். நாற்று விடுவதற்கு முன்னதாக ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் என்ற அளவில் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். தொழில்நுட்ப விபரங்களை உதவி வேளாண்மை அலுவலர்களை நேரடியாகவோ, தொலைபேசி மூலமோ தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் ' என வேளாண்மை உதவி இயக்குனர் ராணி தெரிவித்தார்.

**வறண்ட பூமியில் துளசி லாபம் கொழிக்கும் விவசாயி**

சிவகங்கை அருகே துளசி விவசாயத்தில் மாதம் ரூ.30 ஆயிரம் சம்பாதித்து வருகிறார் விவசாயி. வறண்ட பூமியான சிவகங்கையில் சாதாரண துளசி விவசாயத்திலும், சாதிக்க முடியும் என்பதற்கு உதாரணமாக திகழ்கிறார் விவசாயி மாணிக்கம். சிவகங்கை-மதுரை ரோட்டில் பொன்னாகுளத்தைச் சேர்ந்த இவர், ஒரு ஏக்கரில் துளசி விவசாயம் செய்து உள்ளார். எவ்வித செலவினமும் இன்றி, மாதம் ரூ.30 ஆயிரத்திற்கு மேல் சம்பாதிக்கிறார். அவர் கூறியதாவது: ஒரு காலத்தில் வயல் வரப்புகளில் தானாக வளர்ந்து துளசி செடிகளை அறுத்து விற்பர். இதையே விவசாயமாக செய்து, லாபம் சம்பாதிக்க லாம் என, "தினமலர்' நாளிதழில் படித்தேன். இதற்காக மதுரையில் பயிற்சி வகுப்பிற்கு சென்றேன். இதன் மூலம் தென்னை தோட்டத்திற்குள் துளசி விவசாயம் செய்ய முடிவெடுத்தேன். கடந்த 8 மாதத்திற்கு முன், ரூ.300க்கு துளசி வாங்கி நாற்று வளர்த்தேன். ஒரு மாதத்தில் பிடுங்கி நடவு செய்தேன். 8 நாளுக்கு ஒரு முறை தண்ணீர் மட்டும் பாய்ச்சுகிறேன்.மருந்து எதுவும் தெளிக்க தேவையில்லை. தற்போது, பலனுக்கு வந்துள்ளது. நிழலில் நன்கு வளரும். தென்னைக்குள் ஊடு பயிராக நடலாம். பகுதி, பகுதியாக தினமும் அறுவடை செய்கிறோம். ஒரு மாதத்திற்கு ரூ.30 ஆயிரத்திற்கு மேல் சம்பாதிக்க முடிகிறது. தற்போது ஒரு கிலோ ரூ.20 வரை விற்கப்படுகிறது. திருமணம், கோவில் சீசனில் கூடுதலாக சம்பாதிக்கலாம். சளி, இருமல், வயிறு கோளாறு, துளசி தைலம், துளசி தேன் தைலம், கோவில் மாலை, துளசி பவுடர் தயாரித்தல்

உட்பட பல்வேறு பயன்பாடுக்கு உதவுகிறது. குச்சிப்படாமல் பருவத்தில் அறுவடை செய்தால் ஆண்டுதோறும் பலன் அறுக்கலாம். ஒருமுறை நடவு செய்தால் தொடர்ந்து பலன் எடுக்கும் ஒரே விவசாயம், என்றார்.

**மாசில்லா நகரம்: சின்னமனூர் தினமும் ஒரு டன் இயற்கை உரம் விவசாயிகளுக்கு இலவசம்**

பெரியாறு பாசன வசதியால் சுற்றிலும் வயல்கள் சூழ்ந்து நிற்கும் சின்னமனூர், "செப்பேடு' புகழ் பெற்றது. நகராட்சியில் உள்ள 27 வார்டுகளிலும் பாதாள சாக்கடை திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. நாள்தோறும் 18 டன் குப்பை சேகரிக்கப்படுகிறது. அய்யனார்புரம் பகுதியில் உள்ள குப்பை கிடங்கில் மக்கும், மக்காத குப்பை தரம் பிரிக்கப்படுகிறது. மக்கும் குப்பையில் இருந்து தினமும் தயாரிக்கப்படும் ஒரு டன் இயற்கை உரம் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. அதே நேரம் போதிய சுகாதார பணியாளர்கள் நியமனமில்லாதது, இருப்பவர்களையும் மாற்று பணிக்கு அனுப்புவதால் தெருக்களில் குப்பை தேங்கி கிடக்கிறது. மார்க்கையன்கோட்டை ரவுண்டானா அருகில் உள்ள குப்பை தொட்டியிலிருந்து கழிவுகளை அப்புறப்படுத்தாததால், பயணிகள் துர்நாற்றத்தில் அவதிப்படுகின்றனர். தேவைக்கு ஏற்ப சுகாதார பணியாளர்களை நியமித்தும், மக்கள் பாலிதீன் பயன்பாட்டை குறைத்து, மரக்கன்றுகளை நட்டால் சின்னமனூரை மாசில்லாத பசுமை நகராக மாற்றலாம்.

சோலைகாடுகள் :உயரமான மலைப்பகுதிக்கு அடுத்து பள்ளமான பள்ளத்தாக்கு பகுதிகளில் சோலைக்காடுகள் உருவாகும். இந்த சோலைக்காட்டில் "ரோடோ டென்ரான்' எனும் காட்டு ரோஜா பூக்கும். இது பெரிய அளவில் இருக்கும். இந்த ரோஜா செடிகள் முதலில் வளர்ந்து மண்ணை இலகுவாக்கும். மண் இலகுவானபின் சோலை காடு மரங்கள் வளரும். இந்த மரங்கள் மழை பெய்யும் போது நீரை வேர் பகுதியில் சேமித்து வைத்து கொள்ளும். மழை காலம் முடிந்த பின் கோடை காலம் வரை இங்குள்ள மரங்கள் நீரை கொஞ்சம், கொஞ்சமாக விடுவித்து,சுனைகளில் நீர் வழிய செய்கிறது. மிக உயரமான இடத்தில் உள்ள

மரங்கள் மனிதன் வாழ்வதற்கான நீரை சேமித்து தேவைக்கு ஏற்ப வழங்குவது இயற்கை வழங்கிய கொடையாகும். இதுபோன்ற சோலை காடுகள் தேனி மாவட்ட வனங்களில் நிறைந்துள்ளன. தென்னிந்தியாவில் 2வது உயரமான "மெசுவாபுலி' மலை :தேனி மாவட்டத்தில் 1,18,000 எக்டேர் வனப்பகுதியாக உள்ளது. இயல்பாக இருக்க வேண்டிய பரப்பளவில் 33 சதவீத வனமாக இருப்பது மாவட்டத்தின் சிறப்பு. மேற்கு தொடர்ச்சி மலைகளில் இருந்து வரும் ஊற்று நீர் மூலவைகையில் உற்பத்தியாகும் வைகை ஆறு, கொட்டக்குடி ஆறு, தேனி ஆறு, சுருளி ஆறு போன்ற ஆறுகள் உற்பத்தியாகிறது.

தமிழ்நாடு- கேரளா எல்லையில் கடல் மட்டத்தில் இருந்து 2,637 மீட்டர் உயரம் கொண்ட "மெசுவாபுலி' எனும் மலை உள்ளது. தென்னிந்தியாவிலேயே மிக உயர்ந்த 2வது மலையாகும் இது. பாலிதீன் ஒழிப்பு விழிப்புணர்வு :புவி வெப்பமயமாதலுக்கான காரணங்களில் மக்காத பாலிதீன் முக்கிய பங்கு வகிக்கிறது. ஒருமுறை மட்டும் பயன்படும் " பாலிதீன் பேக்குகளால் மழைநீர் பூமிக்குள் செல்ல விடாமல் தடுக்கிறது. இவற்றை முற்றிலும் ஒழிக்க, மாணவர்களிடம் பாலிதீன் ஒழிப்பு விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொள்கின்றனர்.

சுற்றுச்சூழல் மாசு குறித்து பெற்றோருக்கு விளக்க அவர்களுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. வீட்டுக்கு தேவையான மளிகை சாமான்கள் வாங்க துணிப்பையும், ஓட்டலில் உணவு பொருட்கள் வாங்க பாத்திரமும் கொண்டு செல்லும் பழக்கத்தை ஒவ்வொருவரும் ஏற்படுத்தி கொள்ள வேண்டும்.

சுவாச பிரச்னைக்கு தீர்வு:""அர்ச்சனை பூவிற்காக 30 ஆண்டுகளுக்கு முன் மாடி தோட்டம் அமைத்தேன். செடி பராமரிப்பை ஈடுபாட்டுடன் செய்ததால் உடல் ஆரோக்கியம் மேம்பட்டது. துளசி, கற்பூரவல்லி, கற்றாழை மருதாணி உள்ளிட்ட மூலிகை செடிகள் வளர்க்கிறேன். அவற்றிக்கு மத்தியில் காலையில் நடப்பதால் சுவாச பிரச்னைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது.

வீட்டில் பெண்கள் செடிகள் வளர்க்க வேண்டும். இந்த பழக்கம் அடுத்து வரும் தலைமுறையினர் தூய்மையான காற்று பெறுவதற்கு பேருதவியாக அமையும்,"என்றார். நிலத்தடி நீர்மட்டம் உயர்வு:இயற்கையோடு இயந்து வாழும் வாழ்க்கையே மேலானது என்ற எண்ணம் அனைவருக்கும் ஏற்பட்டால் மட்டுமே சுற்றுச்சூழல் மாசுபடுவதை முழுமையாக தடுக்க முடியும். எனது தொழில் மையம் முழுவதும் மரங்களால் சூழப்பட்டுள்ளது.

மரங்களின் வளர்ச்சிக்கு இடையூறு இல்லாமல் தொழிற்சாலை சாதனங்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன. "தினமலர்' நாளிதழில் வெளியாகும் கட்டுரையால் மழைநீர் சேமிப்பு முறை கையாளப் படுகிறது. தொழிற்சாலை அமைந்துள்ள 1.5 ஏக்கர் பரப்பில் பெய்யும் மழை நீரில், ஒரு சொட்டு கூட வீணாகாமல் சேமிக்கப்படுகிறது. தொழிற்சாலையில் மிச்சமாகும் மக்கும் கழிவுகளை உரமாக்க தோட்டத்தில் "ஷெட்' அமைக்கப்பட்டுள்ளது. நமது செயலால் நம்முடைய பூமி மாசுபடாமல் பார்த்து கொள்வது ஒவ்வொருவரின் கடமை.

சின்னமனூரை மாசற்றதாக்க என்ன வழி? வாசகர்களும் எழுதலாம். மாசில்லா சின்னமனூர், தினமலர், டி.வி.ஆர்., ஹவுஸ், தினமலர் நகர், தேனி- 625 531, போன்: 04546 - 260 987

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை

தினமணி

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க 100 சதவீத மானியம்:மாவட்ட ஆட்சியர் தகவல்**

திருவள்ளூர் மாவட்டத்தில் தோட்டக்கலை, மலைப் பயிர்கள் துறை, வேளாண்மைத் துறை ஆகியவற்றின் சார்பில் தோட்டக்கலை, வேளாண்மைப் பயிர்களுக்கான சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க சிறு குறு விவசாயிகளுக்கு

100 சதவீத மானியம் வழங்கப்படவுள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எ.சுந்தரவல்லி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

திருவள்ளூர் மாவட்டத்தில் தோட்டக்கலை, மலைப்பயிர்கள் துறை, வேளாண்மைத் துறையின் மூலம் தோட்டக்கலை மற்றும் வேளாண்மை பயிர்களுக்கு சொட்டு நீர் பாசனம் அமைப்பதற்கு சிறு குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், இதர விவசாயிகள், பொது, ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது.

சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க விண்ணப்பிக்கும் முறை: விண்ணப்பம் இரு நகல்கள், விண்ணப்பதாரர் புகைப்படம் 2, குடும்ப அட்டை நகல், கணினி சிட்டா அசல் (நடப்பு பசலி), நிலத்தின் வரைபடம், கிராம நிர்வாக அலுவலர் அடங்கல் (நடப்பு பசலி), சிறு, குறு விவசாயிக்கான சான்றிதழ் அசல், மண் பரிசோதனை அட்டை, நீர் பரிசோதனை அட்டை, சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க விரும்பும் விவசாயி விருப்பக் கடிதம், சொட்டு நீர் பாசனம் அமைக்க விவசாயி தேர்வு செய்த நிறுவனத்துக்கான ஒப்புதல் கடிதம், ஒப்புதல் கடிதம் (கூட்டு பட்டா), ஒப்புதல் கடிதம், சொட்டு நீர்ப் பாசன நிறுவனத்தின் உத்தேச மதிப்பு சொட்டு நீர் பாசனம் அமைப்பதற்கு முன்பு நிலத்தின் புகைப்படம், சொட்டு நீர் பாசனம் அமைப்பதற்கான வரைபடம், நீர் ஆதாரம், மின் இணைப்பு விவரம் ஆகிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட ஆவணங்களுடன் பொது, ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகள் தங்களது வட்டாரத்தில் உள்ள வேளாண்மை உதவி அலுவலர்கள், தோட்டக்கலை அலுவலர்கள், வேளாண்மை அலுவலர்கள், தோட்டக்கலை உதவி இயக்குநர்கள், வேளாண்மை உதவி இயக்குநர்கள் ஆகியோரை அணுகி சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க இணையதளத்தில் பதிவு செய்து இந்தத் திட்டத்தில் பயன்பெறலாம். இதன் மூலம் தண்ணீரை சேமித்து குறைந்த அளவு தண்ணீரில் தோட்டக்கலை பயிர்கள் மற்றும் வேளாண்மைப் பயிர்களை சாகுபடி செய்து அதிக அளவு மகசூல், வருமானம் பெற்று விவசாயிகள் பயனடையலாம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**சிறுதானியப் பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு பயிற்சி**

வத்தலகுண்டு வட்டாரம், சென்மார்பட்டி பகுதியில் அட்மா திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கான சிறுதானியப் பயிர்களில் உற்பத்தி தொழில்நுட்பப் பயிற்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. வத்தலகுண்டு வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் கார்த்திகா வரவேற்று, சிறுதானியங்கள் உண்ண வேண்டிய அவசியம் பற்றியும், குறைந்த செலவில் தேவையான உயிர் தொழில்நுட்பங்களைக் கொண்டு மகசூலை உயர்த்தும் வழிமுறைகளையும் கூறினார். மேலும், சிறுதானியங்களில் மதிப்புக் கூட்டுதல் மூலம் மகளிர் குழுக்களை அமைத்து விற்பனை செய்தால் லாபம் ஈட்ட முடியுமென்றும் எடுத்துரைத்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர் கண்ணன் வறட்சி மேலாண்மை பற்றி கூறினார். பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி உதவிப் பேராசிரியர் சுரேஷ் சிறுதானியங்களில் ஒருங்கிணைந்த பூச்சி, நோய் மேலாண்மை பற்றி விளக்கினார். மேலும், அப்பகுதியில் முருங்கை மற்றும் பருத்தியில் அசுவினி, வெள்ளை ஈ தாக்குதலுக்கும் தீர்வு கூறினார்.

**இருமடங்கு உற்பத்தி, மும்மடங்கு வருவாய் பெறும் வகையில் திட்டங்கள்**

தமிழகத்தில் விவசாயிகள் இருமடங்கு உற்பத்தி செய்து மும்மடங்கு வருவாயை ஈட்டும் வகையில் வேளாண் துறையில் வளர்ச்சித் திட்டங்களை அதிமுக அரசு நிறைவேற்றி வருகிறது என்றார் மாநில கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் டி.பி. பூனாட்சி. திருச்சி மாவட்ட ஆட்சியரகத்தில் வேளாண் துறை சார்பில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில், 107 பயனாளிகளுக்கு ரூ.66.6 லட்சம் மானியத்தில் பண்ணை இயந்திரங்களை வழங்கி மேலும் அவர் பேசியது: இரண்டாம் பசுமைப்புரட்சியை ஏற்படுத்தும் நோக்கில் 2014-15ஆம் ஆண்டில் மாநிலத்தின் உணவுதானிய உற்பத்தி125 லட்சம் மெட்ரிக் டன்கள் என்ற அளவை எட்டி சாதனைப் படைத்துள்ளதற்காக மத்திய அரசு விருது வழங்கி கௌரவித்துள்ளது. இருமடங்கு உற்பத்தி, மும்மடங்கு வருவாயை விவசாயிகள் பெற வேண்டும் என்ற நோக்கில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் வேளாண் துறையில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், விவசாய வேலைக்கு நிலவிவரும் ஆள் பற்றாக்குறையை போக்கிட 74 சிறுவிசை உழவு இயந்திரங்கள் ரூ.54,67 லட்சம் மானியத்திலும், உணவுப் பாதுகாப்பு இயக்கம், தமிழ்நாடு பருத்தி சாகுபடித் திட்டத்தின் கீழ் 33 சுழல் கலப்பைகள் ரூ.11.2 லட்சம் மானியத்திலும் என மொத்தமாக 107 பயனாளிகளுக்கு ரூ.66.6 லட்சம் மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது. பண்ணை இயந்திரங்களைப் பெறும் விவசாயிகள் தாங்கள் பயன்படுத்துவதோடு பிற விவசாயிகளுக்கும் குறைந்தபட்ச வாடகையில் வழங்கி வருவாயை ஈட்ட வேண்டும் என்றார் அமைச்சர்.

இதுபோல, அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டத்தின் கீழ் 100 மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கு ரூ.2.01 லட்சம் மதிப்பிலான உதவி சாதனங்களையும் அமைச்சர் பூனாட்சி வழங்கினார்.

இந்த நிகழ்வுகளுக்கு மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி தலைமை வகித்தார். தலைமைக் கொறடா ஆர். மனோகரன், மக்களவை உறுப்பினர் ப.குமார் முன்னிலை வகித்தனர்.

**விவசாயிகள் கவனத்துக்கு...**

அரியலூர் மாவட்டத்தில் சொட்டு நீர் பாசன அமைப்பு தேவைப்படும் விவசாயிகள், அவர்கள் பகுதி தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களை தொடர்பு கொள்ள அழைப்பு விடுக்கப்படுகிறது.

அரியலூர் மாவட்டத்தில் சொட்டு நீர்ப்பாசன திட்டத்தை விவசாயிகளின் மத்தியில் விரைவாக கொண்டு செல்லும் வகையில், அரியலூர்,திருமானூர், தா.பழூர், செந்துறை, ஜயங்கொண்டம், ஆண்டிமடம் ஆகிய பகுதிகளிலுள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களில் சொட்டு நீர் பாசன திட்டத்துக்கான விவசாயிகளின் விவரங்களை சேகரிக்கும் முகாம் தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்த முகாம் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறுகிறது. எனவே, சொட்டு நீர் பாசன அமைப்பு தேவைப்படும் விவசாயிகள் தங்கள் நிலத்தின் கணினி சிட்டா, அடங்கல், நில வரைப்படம், குடும்ப அட்டை, நகர், சிறு, குறு விவசாயிகள் சான்று, 2 புகைப்படத்துடன் சம்பந்தப்பட்ட

தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களில் நடைபெறும். விவசாயிகள் இச்சிறப்பு முகாமை பயன்படுத்தி தங்களது பெயர்களை பதிவு செய்து பயன் பெறவேண்டும் என ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**வேளாண் வளர்ச்சிப் பணிகள் ஆய்வு**

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டாரத்தில் வேளாண் துறை, வேளாண் பொறியியல் துறை, மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகளை ஆட்சியர் க. நந்தகுமார் சனிக்கிழமை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

வேப்பந்தட்டை வட்டம், கிருஷ்ணாபுரம் கிராமத்தில் 2.5 எக்கர் பரப்பிலான உளுந்து விதைப் பண்ணைகளையும், பெரியவடகரை கிராமத்தில் இயந்திர நெல் நடவு நெல் வயல்களையும் பார்வையிட்டு இயந்திர நெல் நடவு முறையினால் விவசாயிகள் அடைந்த நன்மைகளையும் கேட்டறிந்தார் ஆட்சியர். தொடர்ந்து, பசும்பலூர் கிராமத்தில் மக்காச்சோளம் செயல் விளக்க முறைகளையும், எறையூர் கிராமத்தில் நெல் விதைப்பண்ணை, மங்கலமேடு கிராமத்தில் பருத்தி செயல்விளக்கத் திடல் ஆகிய வேளாண் துறை திட்டப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

பாண்டகப்பாடி, நெற்குணம் கிராமத்தில் அமைக்கப்பட்டிருந்த சூரிய மின்மோட்டார் மற்றும் சொட்டுநீர்ப் பாசனம் குறித்து கேட்டறிந்தார்.

இதையடுத்து, மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலம் பசும்பலூர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தடுப்பணைகளையும், வெண்பாவூர், வி.களத்தூர் ஆகிய பகுதிகளில் தொடக்க வேளாணமை கூட்டுறவு கடன் சங்கங்களின் செயல்பாடுகள் மற்றும் கூட்டுறவு கடன் சங்கங்களில் தேவையான உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளதா என்பதையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் ஆட்சியர் க. நந்தகுமார்.

ஆய்வின்போது, வேளாண்மை இணை இயக்குநர் பொ. சந்திரன், கூட்டுறவுத் துறை இணைப் பதிவாளர் சிவ. முத்துகுமாரசாமி, மாவட்ட ஆட்சியரின்

நேர்முக உதவியாளர் (வேளாண்மை) எஸ். சேகர், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் நாகஜோதி, உதவி செயற்பொறியாளர் ராஜேந்திரன், வேளாண்மை துணை இயக்குநர் செந்தமிழ்செல்வன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**பூத்து குலுங்கும் மூங்கில் மரம்: விவசாயிகள் கவலை**

மூங்கில் மரங்கள் பூத்து குலுங்கும் பிப்ரவரி மாதத்தில் எலிகளின் இனப் பெருக்கமும் அதிகரிக்கும் என்பதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

ஏனெனில், மூங்கில் மரத்தின் பூவிலிருந்து உருவாகும் மூங்கில் அரிசி எலிகளின் இனப் பெருக்கத்தை தூண்டும் அருமருந்தாகச் செயலாற்றுகிறது. மூங்கில் மரங்கள் எங்கெல்லாம் பூக்கள் பூத்துள்ளதோ அங்கு எலிகளின் படையெடுப்பும் அதிகரிக்கும்.

இதனால், மூங்கில் மரம் உள்ள பகுதிகளில் நடவு செய்யப்பட்டுள்ள நெல், நிலக்கடலை மற்றும் திணைகளை எலிகள் நாசம் செய்து விடுகின்றன. இதனால், விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். மூங்கில் அரிசிக்கு மருத்துவச் சந்தையில் கடும் கிராக்கி இருக்கும் அதே வேளையில், விளை நிலங்களில் உள்ள பயிர்களும் எலிகள் தொல்லையால் பெரும் சேதத்தைச் சந்திக்கும் என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். மூங்கில் மரம் மிக உயரமாக வளரும் தன்மைக் கொண்டது. அவ்வாறு உயரமாக வளரும் வரையில் அவை கிளைகள் விடுவதில்லை. பின்பு, சிறிய கிளைகள் அடர்த்தியாக வளரும் தன்மை கொண்டவை. இத்தகைய தன்மை கொண்ட மூங்கில் மரம் அதன் வாழ்நாளில் ஒரே தடவை மட்டும் பூக்கும். மூங்கில்களின் இலைகள், குருத்துகளை யானைகள் விரும்பி உண்ணும். அதனாலேயே மூங்கில்கள் இருக்கும் பகுதிகளுக்கு குறிப்பிட்ட காலங்களில் யானைக் கூட்டம் வந்து செல்லும்.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த மூங்கில்கள், குறிப்பிட்ட வயது முதிர்ந்ததும், தானாகவே காய்ந்து விடும். காய்வதற்கு முன்பு மூங்கில் மரங்களில் பூக்கள் பூத்துக் குலுங்கும். மூங்கில் பெரும்பாலும் பிப்ரவரி முதல் மார்ச் மாத காலத்தில் பூக்கும் தன்மை கொண்டது. ஒருசில வாரங்களில், பூக்கள் அனைத்தும் அரிசியாக மாறிவிடும். மூங்கில் அரிசிக்கு சந்தையில் நல்ல விலை

கிடைக்கிறது. முதிர்ந்த மூங்கில்களில் இருந்து கிடைக்கும் அரிசியில் கஞ்சி வைத்து குடித்தால் ஆஸ்துமா, நெஞ்சுவலி குணமடையும் என்பது ஆதிவாசி மக்களின் நீண்டகால நம்பிக்கை. மூங்கிலில் பூ பூக்கும் காலத்தை மூட்டம் என்று வடகிழக்கு பகுதி விவசாயிகள் அழைக்கின்றனர். இந்த மூட்டம் பருவம் ஆரம்பித்தால் விவசாயிகள் வேதனையில் ஆழ்ந்து விடுவர். பெரும்பாலும் மூங்கில் பூ பூத்தால் நாட்டில் மழை குறைந்து விவசாயம் பாதிக்கும் என்ற நம்பிக்கை விவசாயிகளிடம் பரவலாக காணப்படுகிறது.

இதற்கு காரணம் மூங்கில் அரிசியை எலிகள் அதிகம் விரும்பி உண்ணும். இதனால், மூங்கில் அரிசியைத் தேடி எலிகள் கூட்டம் வரும். மேலும், அதன் எண்ணிக்கை அதிகரிப்பால் விளைப் பொருள்கள் சேதமடையும்.

காவேரிப்பட்டணம் அருகே பையூர், பர்கூர் அருகே கந்திகுப்பம் ஆகிய இடங்களில் தேசிய நெடுஞ்சாலையோரத்தில் உயர வளர்ந்துள்ள மூங்கில்களில் பூக்கள் பூத்து குலுங்குவது அனைவரையும் கவரும் வகையில் உள்ளது.

தேசிய நெடுஞ்சாலையில் செல்வோர் மூங்கில் பூத்திருப்பதை அதிசயத்துடன் கண்டு செல்வதாக கந்திகுப்பத்தைச் சேர்ந்த விவசாயி கோவிந்தராஜ்(40) தெரிவித்தார்.

**பொள்ளாச்சியில் தர்பூசணி விலை அதிகரிப்பு**



பொள்ளாச்சி,

பொள்ளாச்சியில் தர்பூசணி விலை அதிகரித்து உள்ளது.

<u>தர்பூசணி</u>

குளிர்காலம் முடிந்து, கோடை காலம் தொடங்க உள்ளது. கோடை காலத்தில் தர்பூசணி, இளநீர் மற்றும் வெப்பத்தை தணிக்கும் குளிர்பானங்கள் விற்பனை அதிகமாக இருக்கும். கோடை காலங்களில் விரும்பி சாப்பிடும் பழமான தர்பூசணி பழங்கள் பொள்ளாச்சி மார்க்கெட்டு வர தொடங்கி உள்ளன. கடந்த ஆண்டு தர்பூசணி கிலோ ரூ.10–க்கு விற்பனை ஆனது. ஆனால் இந்த ஆண்டு கிலோ ரூ.15 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனால் வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். <u>விளைச்சல் குறைவு</u>

இதுகுறித்து வியாபாரி ஒருவர் கூறியதாவது:–

கோடை காலம் தொடங்க உள்ளதால், தர்பூசணி பழங்கள் பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு வரத் தொடங்கி விட்டன. உடுமலை, குடிமங்கலம், பழனி போன்ற பகுதிகளில் இருந்து தர்பூசணி கொண்டு வரப்படுகின்றன.

கடந்த ஆண்டு விளைச்சல் அதிகமாக இருந்தது. இதனால் விலை குறைவாக இருந்தது. ஆனால் இந்த ஆண்டு போதிய மழை பெய்யாத காரணத்தால், தர்பூசணி விளைச்சல் குறைந்து உள்ளது. இதனால் கடந்த ஆண்டை விட விலை அதிகரித்து உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**மேட்டூர் அணை நீர் தேக்க பகுதியில் முழுவடை விவசாய பணியில் தீவிரம் காட்டும் விவசாயிகள்**



மேட்டூர் அணையின் நீர் தேக்க பகுதிகளில் முகாம் அமைத்து முழுவடை விவசாயத்தில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். முழுவடை விவசாயம் மேட்டூர் அணையின் நீர்மட்டம் குறையும் போதெல்லாம் மேட்டூர் அணையின் நீர் தேக்க பகுதிகளான பண்ணவாடி, கோட்டையூர், சேத்துக்குளி, மூலக்காடு ஆகிய பகுதிகளில் முழுவடை விவசாயம் செய்யப்படுவது வழக்கம். இந்த நீர்தேக்க பகுதிகளில் எள், கம்பு, சோளம்

போன்ற தானிய பயிர்களும், கத்தரி, முள்ளங்கி, வெண்டை போன்ற காய்கறி பயிர்களும் விளைவிக்கப்பட்டு வருகிறது.

பெருமாள் கோவில் நத்தம் பகுதிகளில் புகையிலை, பருத்தி போன்ற பணப்பயிர்களும் விளைவிக்கப்பட்டு வருகிறது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வரும் போது, இந்த நீர் தேக்க பகுதிகளில் முப்போக சாகுபடி செய்யப்படுவது வழக்கம்.
விவசாயிகள் தீவிரம் நடப்பாண்டில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் தற்போது சரிந்து வருவதால், நீர் தேக்க பகுதிகளில் முழுவடை விவசாயத்தில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். இதற்காக விவசாயிகள் நீர் தேக்க பகுதிகளில் தற்காலிக முகாம்களை அமைத்து தங்களது கால்நடைகளுடன் அங்கேயே முகாமிட்டு விவசாயத்தில் மும்முரம் காட்டி வருகின்றனர்.

**தூத்துக்குடி மார்க்கெட்டில் பருப்பு வகைகள் விலை குறைவு**



தூத்துக்குடி,
தூத்துக்குடி மார்க்கெட்டில் பருப்பு வகைகள் விலை குறைந்து விற்பனை செய்யப்பட்டன. விலை குறைந்தது

தூத்துக்குடி மார்க்கெட்டில் துவரம் பருப்பு 1–வது ரகம் ரூ.1,000 குறைந்து ரூ.14 ஆயிரத்துக்கும், 2–வது ரகம் ரூ.1,000 குறைந்து ரூ.13 ஆயிரத்துக்கும், உளுந்து ரூ. 1,000 குறைந்து ரூ.8 ஆயிரத்து 500–க்கும், தொலிப்பருப்பு ரூ.500 குறைந்து ரூ.11 ஆயிரத்துக்கும், உருட்டுப்பருப்பு ரூ.600 குறைந்து ரூ.14 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டது. குத்துப்பருப்பு ரூ.1,000 குறைந்து ரூ.11 ஆயிரத்துக்கும், பாசிபருப்பு ரூ.200 குறைந்து ரூ.9 ஆயிரத்துக்கும், பாசிபயறு 2–வது ரகம் ரூ.500 குறைந்து ரூ.5 ஆயிரத்துக்கும், உடைசல் மல்லி ரூ.2 ஆயிரம் குறைந்து ரூ.7 ஆயிரத்துக்கும், உருட்டு மல்லி ரூ.2 ஆயிரம் குறைந்து ரூ.8 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டது. வத்தல் ரூ.500 அதிகரித்து ரூ.13 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. பாசிப்பயறு முதல் ரகம் ரூ.9 ஆயிரத்து 400–க்கும், பட்டாணி பருப்பு (ஆஸ்திரேலியா) ரூ.3 ஆயிரத்து 800–க்கும், கனடா ரூ.3 ஆயிரத்து 200–க்கும், கடலைப்பருப்பு ரூ.6 ஆயிரத்து 200–க்கும், வெங்காயம் ரூ.2 ஆயிரத்து 500–க்கும், பல்லாரி ரூ.1,200 முதல் ரூ.1,250 வரை, கேப்பை (தீட்டல்) ரூ.2 ஆயிரத்து 200, கேப்பை ரூ.2 ஆயிரம், வெள்ளை தினை ரூ.3 ஆயிரம், கம்பரிசி ரூ.1,900–க்கும், தவசம் ரூ.2 ஆயிரத்து 900–க்கும், பொரிகடலை ரூ.3 ஆயிரத்து 900–க்கும், வெள்ளைச்சோளம் ரூ.2 ஆயிரத்துக்கும், மக்காச்சோளம் ரூ.1,800–க்கும், சீனி ரூ.3 ஆயிரத்து 400–க்கும் விற்பனை செய்யப்பட்டது. விலை விவரம் (100 கிலோ)

உளுந்து ரூ.8,500

தொலி பருப்பு ரூ.11,000

உருட்டு பருப்பு ரூ.14,000

குத்துப் பருப்பு

(தொலி நீக்கியது) ரூ.11,000

பாசிப்பருப்பு ரூ.9,000

பாசிப்பயறு

(1–வது ரகம்) ரூ.9,400

(2–வது ரகம்) ரூ.5,000

பட்டாணி பருப்பு

(ஆஸ்திரேலியா) ரூ.3,800

(கனடா) ரூ.3,200

கடலைப்பருப்பு ரூ.6,200

துவரம்பருப்பு

(1–வது ரகம்) ரூ.14,000

(2–வது ரகம்) ரூ.13,000

வத்தல்(குண்டூர் ஏசி)ரூ.13,000

உடைசல் மல்லி ரூ.7,000

உருட்டு மல்லி ரூ.8,000

வெங்காயம்(சிறியது)ரூ.2,500

பல்லாரி ரூ.1,200–1,250

கேப்பை (தீட்டல்) ரூ.2,200

கேப்பை ரூ.2,000

வெள்ளைதினை ரூ.3,000

கம்பரிசி ரூ.1,900

தவசம் ரூ.2,900

பொரிகடலை

(55 கிலோ) ரூ.3,900

வெள்ளைச்சோளம்ரூ.2,000

மக்காச்சோளம் ரூ.1,800

சீனி ரூ.3,400

**நெகமம் பகுதியில் பாகற்காய் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்**



நெகமம்

நெகமம் பகுதியில் பாகற்காய் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகிறார்கள். பாகற்காய் சாகுபடி நெகமம் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. தென்னை முக்கிய விவசாயமாக இருந்தாலும், பல ஏக்கர் பரப்பளவில் நிலக்கடலை, காய்கறிகள் சாகுபடியும் நடந்து வருகிறது. இந்த பகுதியில் விவசாயத்தை நம்பி ஏராளமானவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். சேரிபாளையம், ஆண்டிபாளையம், கப்பிணிபாளையம், மெட்டுவாவி, வெள்ளேகவுண்டன்புதூர் ஆகிய இடங்களில் விவசாயிகள் பாகற்காய் சாகுபடி செய்ய ஆர்வம் காட்டி வருகிறார்கள். இந்த பகுதிகளில் பந்தல் அமைத்து, பாகற்காய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:- நெகமம் பகுதியில் கத்திரிக்காய், தக்காளி, பாகற்காய் உள்ளிட்ட காய்கறிகள் சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது பந்தல் அமைத்து பாகற்காய் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. சுமார் 300 ஏக்கருக்கு மேல் பாகற்காய் பயிரிடப்பட்டுள்ளது.

விலை அதிகரிப்பு

அறுவடை செய்யப்படும் பாகற்காய் கிணத்துக்கடவு, பொள்ளாச்சி மார்க்கெட்டுகளுக்கு விற்பனைக்காக கொண்டு செல்கிறோம். ஒரு சில வியாபாரிகள் நேரடியாக விவசாய தோட்டங்களுக்கு வந்து கொள்முதல் செய்து

செல்கிறார்கள். ஒரு கிலோ ரூ.17 முதல் ரூ.18 வரை விற்பனையாகிறது. கடந்த மாதத்தை விட தற்போது ஒரு கிலோவுக்கு ரூ.2 வரை விலை அதிகரித்துள்ளது. அதே நேரத்தில் கடந்த சில நாட்களாக பாகற்காய் கொடிகளில் நோய் தாக்குதல் ஏற்பட்டு உள்ளது. இதை தடுக்க வேளாண்மைத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்கள்.

**பெண்கள், குழந்தைகளுக்கு ஏற்ற வாழைப்பூ உணவுகள்**



மங்களகரமான அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் அடையாளமாக வாழை மரத்தை பூவோடு கட்டுகிறோம். அது அலங்காரத்திற்காக அல்ல. மனித வாழ்க்கையில் வாழை மரத்திற்கும், வாழைப்பூ விற்கும் இருக்கும் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டத்தான் அதனை வாயிலில் கட்டுகிறோம். வாழைப்பூவில் நிறைய மருத்துவ குணங்கள் உள்ளன. முக்கியமாக மலட்டுத்தன்மையை போக்கும்தன்மை அதில் இருக்கிறது. உடலுக்கு பலத்தை கொடுத்து, இனப்பெருக்கத் திறனை மேம்படுத்தும்.

வாழைப் பூவின் சிறப்பை உணர்த்தும் சித்த மருத்துவ பாடல்:
வாழைபூ மூல ரத்தம் மாபிரமி வெட்டை பித்தம்
கோழை வயிற்றுகடுப்பு கொல்காசம் –ஆழியனல்
என்ன எரி கை கால் எரிவுஞ் தொலைத் துடலில்
மன்ன வளர்க்குத் தாதுவை பாடலின் பொருள்:

மூலம், ரத்த மூலம், வெள்ளைப்படுதல், பித்தம், உடல் சூட்டினால் உண்டாகும் வயிற்றுக் கடுப்பு, இருமல், கை, கால் எரிச்சல் இவற்றை நீக்கி, தாதுவை விருத்தி செய்யும் சக்தி வாழைப்பூவுக்கு இருக்கிறது. வாழைப்பூ துவர்ப்பு சுவையுடையது. இந்த சுவை ரத்தத்தை சுத்தம் செய்யும் தன்மையுடையது. உடலில் உள்ள புண்களை ஆற்றி நரம்புகளுக்கு சக்தியளிக்கும் ஆற்றலும் இதில் இருக்கிறது. வாழைப்பூவை உணவில் சேர்த்துவந்தால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். சர்க்கரை நோயாளிகள் வாரம் ஒரு முறை உணவில் வாழைப்பூவை சேர்த்துக்கொள்ளவேண்டும். அதனை சமைத்து சாப்பிட்டால் சர்க்கரை நோயாளிகளின் நரம்புகள் வலிமையடையும். கை, கால், பாதங்களில் உண்டாகும் குத்தல் மற்றும் எரிச்சல் நீங்கும். வாழைப்பூவில் இருக்கும் நார்ச்சத்து உடலில் உள்ள சர்க்கரையின் அளவையும் குறைக்க உதவும். இன்றைய உணவு பழக்கத்தால் வயிற்றில் புண்கள் உண்டாகின்றன. மலச்சிக்கல் உருவாகி மூலநோயும் தோன்றுகின்றன. மூல நோயால் பாதிக்கப்படும்போது, மலத்துடன் ரத்தம் வெளியேறும். உள்மூலம், வெளி மூலம் மற்றும் மலக்குடல் புண்களால் அவதிப்படுகிறவர்கள், வாழைப்பூவை சமைத்து சாப்பிடவேண்டும். உடல் சூடு காரணமாக உண்டாகும் வயிற்றுக் கடுப்பு, சீதபேதி மற்றும் தொடர் இருமலுக்கும் வாழைப்பூ சிறந்த மருந்து.

பெண்களுக்கு வாழைப்பூ ஒரு வரப்பிரசாதம். மாதவிலக்கு காலங்களில் உண்டாகும் அதிக உதிரப்போக்கிற்கு வாழைப்பூவின் உள்ளே இருக்கும் வெண்மையான பாகத்தை எடுத்து, அரைத்து 100 மி.லி. நீரில் கலந்து வடிகட்டவேண்டும். அதில் தேவைக்கு பனங்கற்கண்டு கலந்து அருந்தினால், உதிரப்போக்கு கட்டுப்படும். உடல் அசதி, வயிற்று வலி, சூதக வலி போன்றவைகளும் குறையும். வெள்ளைப் படுதலுக்கும் இதுபோன்று தயாரித்து

பருகவேண்டும்.

குழந்தைப் பேறினை எதிர்பார்க்கும் தம்பதிகள் வாரத்தில் ஒருநாள் வாழைப்பூவை உணவில் சேர்த்துக்கொள்ளவேண்டும். வாழைப்பூவில் உள்ள தடிப்பான நரம்பை நீக்கிவிட்டு மீதமுள்ள பாகங்களை நறுக்கி சமைக்கவேண்டும். வாழைப்பூ வேகுவதற்கு சற்று அதிக நேரமாகும். பெரும்பாலான குடும்பங்களில் அவசர கதியில் உணவு தயாரிப்பதால், அதனை சமைத்து உணவில் சேர்க்காமலே விட்டு விடுகிறார்கள். அதனால் மருத்துவ குணமிக்க வாழைப்பூவின் சக்தி அவர்களுக்கு கிடைக்காமலே போய்விடுகிறது. நீங்கள் அவசர சமையல் மேற்கொள்பவராக இருந்தாலும் வாரத்தில் ஒருமுறையாவது சமைத்து அதனை சாப்பிடுங்கள். சிறுவயதில் இருந்தே குழந்தைகளையும் வாழைப்பூ பதார்த்தங்களை சாப்பிட பழக்கப்படுத்துங்கள். இதை சாப்பிட்டால் குழந்தைகள் நோய் எதிர்ப்பு சக்திமிக்கவர்களாக திகழ்வார்கள்.

**பூ பச்சடி**

வாழைப்பூ – 1

தேங்காய் துருவல் – 3 தேக்கரண்டி

சீரகம் – 1 தேக்கரண்டி

பச்சை மிளகாய் – 1

தயிர் – 100 மி.லி.

உப்பு – தேவைக்கு

**செய்முறை:**

வாழைப்பூவை சிறிதாக நறுக்கி, சிறிது நீர் தெளித்து வாணலியில் கொட்டி, மூடிவைத்து சிறுதீயில் வேகவையுங்கள். வெந்ததும் இறக்கி, ஆறவிடுங்கள். தேங்காய் துருவல், சீரகம், பச்சைமிளகாயை மிக்சியில் அரைக்கவும். அத்துடன் வாழைப்பூவையும் கலந்து ஒரு சுற்று மட்டும் ஓடவிட்டு, உப்பு, தயிர் கலந்து பரிமாறுங்கள்.

வாழைப்பூ உதிரப்போக்கை கட்டுப்படுத்தும் தன்மையுள்ளது. அதனால் ரத்த மூலம் மற்றும் மாதவிடாய் காலத்தில் உண்டாகும் அதிக குருதி போக்கிற்கு இது சிறந்த உணவு. நார்ச்சத்து அதிகம் உள்ளதால் மலச்சிக்கலும் நீங்கும்.

<u>**பூ வடகம்**</u>

வாழைப்பூ – 4

உளுத்தம் பருப்பு – 100 கிராம்

காராமணி – 100 கிராம்

காய்ந்த மிளகாய் – 6

உப்பு – தேவைக்கு

பெருங்காய பொடி – 1 தேக்கரண்டி

மஞ்சள்தூள் – 1 தேக்கரண்டி

**செய்முறை:**

வாழைப்பூவை சரியாக பிரித்தெடுத்து சிறிதாக நறுக்கி, மோரில் சில நிமிடங்கள் போட்டு வைத்துவிட்டு வடிகட்டி எடுத்துவிடவும். இதனால் துவர்ப்பு சுவை குறையும்.

உளுத்தம் பருப்பு, காராமணியை தனித்தனியாக இரண்டு மணி நேரம் ஊறவைக்கவும். அதில் காய்ந்த மிளகாயை சேர்த்து தறியாக அரைக்கவும். அதில் வாழைப்பூ, உப்பு, மஞ்சள் பொடி, பெருங்காய பொடி போன்றவைகளை கலந்து சிறிய வடகங்களாக வார்த்து, வெயிலில் நன்றாக காய வைத்து பத்திரப்படுத்துங்கள்.

தேவைப்படும்போது 2 தேக்கரண்டி எண்ணெய்யில் ஐந்து வடகங்களை வறுத்து சாம்பார் அல்லது கூட்டில் இட்டு சாப்பிடலாம். அப்படியே உணவில் கலந்தும்

சாப்பிடலாம்.

இது கர்ப்பப்பையை வலுப்படுத்தக் கூடிய உணவு. மாதவிடாய் காலங்களில் அதிகமான உதிரப்போக்கால் துன்பப்படுபவர்கள் தினம் மூன்று வடகங்களை உணவில் கலந்து சாப்பிட்டு வரலாம். சினைப்பையில் நீர்க்கட்டி இருப்பவர்களும் இதனை தினமும் உணவில் சேர்த்துக்கொள்ளலாம்.

**பூ அடை**

வாழைப்பூ – 1

உளுத்தம் பருப்பு – 100 கிராம்

பச்சை பயறு – 100 கிராம்

புழுங்கல் அரிசி – 200 கிராம்

காய்ந்த மிளகாய் – 3

உப்பு – தேவைக்கு

பெருங்காய பொடி – 1/2 தேக்கரண்டி

நல்லெண்ணெய் – தேவைக்கு

**செய்முறை:**

உளுத்தம் பருப்பு, பச்சைபயறு, அரிசி போன்றவைகளை இரண்டு மணி நேரம் ஊறவையுங்கள். பின்பு அத்துடன் காய்ந்த மிளகாயை சேர்த்து அரையுங்கள்.

வாழைப்பூவை சிறிதாக நறுக்கி, அரைத்து வைத்துள்ள மாவில் கலந்திடுங் கள். அத்துடன் உப்பு, பெருங்காய பொடி கலந்து தேவையான அளவு நீர் சேர்த்து பிசைந்து, தோசைக்கல் மூலம் அடையாக வார்த்தெடுங்கள். அடை தயாரிக்க சிறிது நல்லெண்ணெய் பயன்படுத்துங்கள்.

இது ஒரு சுவையான சிற்றுண்டி. குழந்தைகளும் விரும்பி சாப்பிடுவார்கள். நார்ச்சத்து மிகுந்த சத்தான உணவு. கருவுற்ற பெண்களுக்கு ஏற்றது.

## பூ துவட்டல்

வாழைப்பூ – 1

சிறிய வெங்காயம் – 100 கிராம்

தேங்காய் துருவல் – 3 தேக்கரண்டி

உப்பு – தேவைக்கு

**தாளிக்க:**

கடுகு – 1/2 தேக்கரண்டி

உளுத்தம் பருப்பு – 1/2 தேக்கரண்டி

காய்ந்த மிளகாய் – 1

தேங்காய் எண்ணெய் –2 தேக்கரண்டி

**செய்முறை:**

வாழைப்பூவை சிறிதாக நறுக்கிக் கொள்ளவும். வெங்காயத்தையும் நறுக்கவும். வாணலியில் தேங்காய் எண்ணெய் ஊற்றி தாளித்து வெங்காயத்தை கொட்டி வதக்கவும். அதில் நறுக்கி வைத்துள்ள வாழைப்பூவை இட்டு நன்கு கிளறி, சிறிது நீர் தெளித்து மூடிவைத்து வேகவையுங் கள். பின்பு தேங்காய் துருவல் உப்பு கலந்து நன்கு கிளறி வதக்குங்கள். தாளிக்கவேண்டிய பொருட்களை தாளித்து சேர்த்து சுவையுங்கள்.

இது சர்க்கரை நோயாளிகளுக்கு ஏற்ற உணவு. மூல நோய் உள்ளவர்கள் அடிக்கடி செய்து சாப்பிடலாம்.

**அறுவடைக்கு தயாரான நிலையில் கரும்புகளைமர்ம நோய் தாக்குதல் விவசாயிகள் கவலை**

அறுவடைக்கு தயாரான கரும்புகளை மர்மநோய் தாக்கி உள்ளது. அதிகாரிகள் கண்டுகொள்ளாததால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர். அமராவதி ஆற்றுப் பாசனத்தில் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒப்பந்த விவசாயிகள் கரும்பு பயிரிட்டுள்ளனர். கல்லாபுரம், ருத்ராபாளையம், குமரலிங்கம்,

பெருமாள்புதூர்,சமாராயப்பட்டி,கொழுமம்,மடத்துக்குளம்,ஜோத்தம்பட்டி, சோழமாதேவி,காரத்தொழுவு ஆகிய பகுதிகளில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. கடந்த மேமாதம் சாகுபடியை துவக்கிய விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.50ஆயிரம் வரை செலவு செய்துள்ளனர். வடகிழக்கு பருவமழை போதிய அளவு பெய்ததாலும், அமராவதி அணையில் நீர்மட்டம் நிறைந்திருந்ததாலும் தண்ணீர் தட்டுப்பாடின்றி கரும்பு விளைந்து தற்போது அறுவடைக்கு தயாராக உள்ளது. வருகிற மார்ச்,ஏப்ரல் மாதத்தில் அமராவதி சர்க்கரை ஆலையில் அரவை பருவம் துவங்க இருக்கிறது. ஏக்கருக்கு 35 முதல் 40 டன் வரை கரும்பு மகசூல் கிடைக்கும் என்ற மகிழ்ச்சியில் விவசாயிகள் இருந்தனர். இந்நிலையில் தற்போது கரும்பு பயிரை மர்ம நோய் தாக்கி உள்ளது. அதன் தோகைகள் காய்ந்து கருகி வருகின்றன. ஏறத்தாழ 3 ஆயிரம் ஏக்கரில் இந்நோய் தாக்குதல் உள்ளது. இதுகுறித்து வேளாண் அதிகாரிகள் மற்றும் சர்க்கரை ஆலை அதிகாரிகளிடம் முறையிட்டும் இதுவரை கண்டுகொள்ளவில்லை. மர்ம நோய் காரணமாக கரும்பு காய்ந்து அதன் பிழிதிறன் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். உடனடியாக கரும்பு பயிரை காக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தி உள்ளனர்

**தக்காளி விலை 3 மடங்கு சரிவு**

திருச்சியில் சில்லறை கடைகளில் தக்காளி விலை 3 மடங்கு சரிந்து, கிலோ ரூ.10க்கு விற்கப்பட்டது. திருச்சி காந்தி மார்க்கெட்டுக்கு, வெளி மாநிலங்களில் இருந்து காய்கறிகள் இறக்குமதி செய்யப்படுகிறது. பின்னர் இங்கிருந்து மற்ற மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. கடந்த சில மாதங்களாக காந்தி மார்க்கெட்டில் ஆங்கில காய்கறிகள் உள்ளிட்ட நாட்டு காய்கறிகள் விலை இறங்கு முகமும், ஏறுமுகமாக இருந்து வருகிறது. இந்நிலையில் கடந்த ஓரிரு நாட்களாக ஒரு சில காய்கறிகளின் விலையில் திடீர் சரிவு நிலை ஏற்பட்டுள்ளது. திருச்சியில் சில்லறை கடைகளில் கிலோ ரூ.40க்கு விற்ற தக்காளி ரூ.10க்கும், ரு.60க்கு விற்ற சின்ன வெங்காயம் ரூ.35க்கும், ரூ.36க்கு விற்ற பல்லாரி வெங்காயம் ரூ.28க்கும், ரூ.36க்கு விற்ற உருளை கிழங்கு ரூ.24க்கும், ரூ.50க்கு விற்ற பச்சை மிளகாய் ரூ.40க்கும், ரூ.40க்கு விற்ற சவ்சவ் ரூ.20க்கும், ரூ.40க்கு விற்ற பீட்ரூட் ரூ.28க்கும், ரூ.70க்கு விற்ற கருணை கிழங்கு ரூ.40க்கும், ரூ.50க்கு விற்ற சேனை கிழங்கு ரூ.40க்கும், ரூ.50க்கு விற்ற காலிபிளவர் ரூ.30க்கும், ரூ.20க்கு விற்ற ஒரு தேங்காய் ரூ.15க்கும் விலை குறைந்து விற்கப்படுகிறது. இதே போல் ஒரு சில காய்கறிகள் விலை ஏறுமுகத்தில் உள்ளது. ரூ.28க்கு விற்ற கிலோ கத்திரிக்காய் ரூ.60க்கும், ரூ.28க்கு விற்ற பீன்ஸ் ரூ.60க்கும், ரூ.40க்கு விற்ற கேரட் ரூ.50க்கும், ரூ.28க்கு விற்ற அவரை ரூ.40க்கும், ரூ.40க்கு விற்ற வெண்டை ரூ.50க்கும் விற்கப்படுகிறது. இதில் ஒரு சில காய்கறிகள் அதே விலையான கிலோ கோஸ் ரூ.28க்கும், முருங்கை ரூ.140, இஞ்சி ரூ.60க்கும் விற்கப்பட்டு வருகிறது.

**உலகளவில் கருப்பு தேயிலை உற்பத்தி அதிகரிப்பு**

வாடிக்கையாளர்களின் தேயிலை தூள் பயன்பாடு எதிரொலியால் உலக அளவில் கருப்பு தேயிலை உற்பத்தி அதிகரித்துள்ளது. உலக அளவில் தேயிலை தொழில் இந்தாண்டு முன்னேற்றம் கண்டுள்ளது. இந்தாண்டு ஜனவரி முதல் ஆகஸ்ட் மாதம் வரை தேயிலை உற்பத்தி அதிகரித்து உள்ளதுடன் அதற்கு விலையும் கூடுதலாக கிடைத்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் தேயிலை தூளின் பயன்பாடு அதிகரித்துள்ளது தான். கருப்பு தேயிலையை அனைத்து தரப்பினரும் விரும்பி பயன்படுத்துவதால் ஏற்றம் கண்டுள்ளது. கடந்தாண்டு இந்தியாவில் மட்டும் 9 சதவீத கருப்பு தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது. இந்தாண்டு இதன் உற்பத்தி 15 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்தாண்டு முதல் 8 மாதங்களில் கென்யா ஏல மையத்தில் 92 சதவீதம், இலங்கையில் 97 சதவீதம், இந்தோனிசியாவில் 99 சதவீதம், இந்தியாவில் 80 சதவீதம் என வாரந்தோறும் நடக்கும் ஏலத்தில் தேயிலை தூள் விற்பனையாகி உள்ளது. இந்தியாவிலுள்ள 8 ஏல மையங்களிலும் கருப்பு தேயிலைக்கு கடும் கிராக்கி நிலவி வருகிறது. அனைத்து பகுதிகளிலும் தேயிலைக்கு சாதகமான சூழல் இருப்பதால் இந்தாண்டு இறுதியில் தேயிலை தூள் உற்பத்தி மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

**ரத்த அழுத்தத்தை குறைக்கும் சிறுகண் பீளை**




சிறுகண் பீளை செடி சாலை, ஏரிக்கரை ஓரங்களில் வளரக்கூடியது. சிறுகண் பீளைக்கு பொங்கல் பூ என்ற பெயரும் உண்டு. சிறுநீரை வெளித்தள்ளும் தன்மை கொண்டது. கற்களை கரைக்க கூடியது. சர்க்கரை நோய்க்கு மருந்தாகிறது. நோய் கிருமிகளை அகற்ற கூடியது.சிறுகண் பீளை வேரை பயன்படுத்தி கழிச்சல், சீதக் கழிச்சலுக்கான மருந்து தயாரிக்கலாம்.

தேவையான பொருட்கள்: வேர், கோரைக் கிழங்கு, சோம்பு, பனங்கற்கண்டு. வேரை நன்றாக சுத்தம் செய்து 3 கிராம் வரை எடுக்கவும். அரை ஸ்பூன் கோரைக் கிழங்கு பொடி, அரை ஸ்பூன் சோம்பு, சிறிது பனங்கற்கண்டு சேர்த்து ஒரு டம்ளர் நீர் விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி குடித்துவர வயிற்றுப்போக்கு குணமாகும். கழிச்சல், சீத கழிச்சல், உஷ்ணத்தால் ஏற்படும் அடி வயிறு கடுப்பு சரியாகும். சிறுகண் பீளை சாறு பயன்படுத்தி வெள்ளைப்போக்கு பிரச்னைக்கு மருந்து தயாரிக்கலாம்.

இதற்கு தேவையான பொருட்கள்: சிறுகண் பீளை பூ, இலை, மோர். இலை மற்றும் பூவை நன்றாக அரைத்து எடுத்து சாறு எடுக்கவும். 20 மில்லி சாறுடன் அரை டம்ளர் புளிப்பில்லாத மோருடன் சேர்த்து கலக்கவும். இதை குடித்தால் வெள்ளைப்போக்கு பிரச்னை சரியாகும். பால்வினை நோய் குணமாகும். சிறுகண் பீளை செடியை பயன்படுத்தி சிறுநீரக கற்களை கரைக்கும் மருந்து

தயாரிக்கலாம். ஒருபிடி அளவுக்கு சிறுகண் பீளை பூ, இலை, வேர் எடுக்கவும்.

இதில் ஒரு டம்ளர் நீர் விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி குடித்தால் சிறுநீரக கற்களை உடைக்கும் அற்புத மருந்தாகிறது. சிறுநீர் தாரையில் ஏற்படும் வலி, ரத்தக் கசிவு குணமாகும். சிறுநீரக கோளாறுகளை சரிசெய்கிறது. ரத்தத்தில் சர்க்கரை அளவை குறைக்கிறது. சிறுகண் பீளை பூக்களை பயன்படுத்தி தலைவலி, உயர் ரத்த அழுத்தத்துக்கான தேனீர் தயாரிக்கலாம். ஒருபிடி அளவுக்கு பூக்கள் மற்றும் இலைகள் எடுக்கவும்.

இதனுடன் சிறிது பனங்கற்கண்டு சேர்த்து ஒரு டம்ளர் நீர் விட்டு கொதிக்க வைத்து வடிகட்டி குடித்தால், முதுகு வலி சரியாகிறது. வீக்கத்தை குறைக்கிறது. வலியை தணிக்கிறது. காய்ச்சலை போக்கும் தன்மை கொண்டது. கொழுப்பு சத்தை குறைக்கும். உயர் ரத்த அழுத்தத்தை குறைக்கிறது.சிறுகண் பீளையை பயன்படுத்தி தோலில் ஏற்படும் எரிச்சலை போக்கும் மருந்து தயாரிக்கலாம்.

சிறுகண் பீளையின் இலை, பூ, தண்டு, வேர் ஆகியவற்றை அரைத்து எடுத்து சாறு எடுக்கவும். இந்த சாற்றை பூசினால் தோலில் ஏற்படும் எரிச்சல் சரியாகும்.பல்வேறு பயன்களை கொண்ட சிறுகண் பீளையானது, தலைவலி, உடல் வலி, படபடப்பு, கை, கால் நடுக்கத்தை சரிசெய்கிறது. சிறுகண் பீளையின் இலை, பூ, வேர் ஆகியவை அற்புத மருத்துவ குணங்களை கொண்டவை.

**கம்பம் பள்ளதாக்கில் விவசாயிகளை வஞ்சிக்கும் திராட்சை விலை நஷ்டத்தால் கண்ணீர்**

கம்பம் பள்ளத்தாக்கில் பன்னீர் திராட்சைக்கு விலை இல்லாத நிலையில் விவசாயிகள் கண்ணீர் வடிக்கின்றனர். இந்தியாவிலேயே கம்பம் பள்ளதாக்கில் மட்டுமே ஒருவருடத்திற்கு 3 முறை அறுவடை செய்யக்கூடிய கருப்பு பன்னீர்திராட்சை விவசாயம் நடைபெற்று வருகிறது. திராட்சையின் தலைநகரமாக உள்ள காமயகவுண்டன்பட்டியை தலைமையாக கொண்டு

சுருளிப்பட்டி, நாராயணத்தேவன்பட்டி, ராயப்பன்பட்டி, ஆனைமலையன்பட்டி, க.புதுப்பட்டி, அணைப்பட்டி, அனுமந்தன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 7 ஆயிரம் முதல் 10 ஆயிரம் ஏக்கர் வரை கருப்பு திராட்சை விவசாயம் நடைபெற்று வருகிறது. திராட்சை விவசாயத்தை நம்பி ஏராளமான விவசாயதொழிலாளர்கள் குடும்பங்கள் உள்ளன.

திராட்சை விலை அதிகபட்சமாக சராசரியாக ஒரு கிலோ ரூ.30க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த வருடம் கோடைகாலங்களில் கருப்பு திராட்சை ஒருகிலோரூ. 45 முதல் ரூ.50 வரை விற்பனை செய்யப்பட்டது. இங்கு விளையும் திராட்சை பழங்கள் மருத்துவ குணம் கொண்டதால் கேராள மாநிலத்தில் அதிகளவில் விற்பனை செய்யப்படுகிறது. இதேபோல் தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, கோவை உள்ளிட்ட பெருநகரங்களுக்கு கருப்பு திராட்சை அனுப்படுகிறது. தற்போது மராட்டிய மாநிலத்திலிருந்து அதிகளவில் விதையில்லா திராட்சை மார்க்கெட்களில் புகுந்துவிட்டது. இதனால் கருப்பு பன்னீர் திராட்சைக்கு போதிய விலை இல்லை. இந்த பகுதியில் ஒரு கிலோ திராட்சை தற்போது ரூ.14 க்கு வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். இதனால் விவசாயிகள் கவலையில் உள்ளனர். இதுகுறித்து திராட்சை விவசாயிகள் கூறுகையில், ‘மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து விதையில்லா திராட்சை தற்போது விற்பனைக்கு பெருமளவில் வந்துவிட்டது. இதனால் இங்குவிளையும் திராட்சைக்கு மார்க்கெட்டில் போதிய விலை கிடைப்பதில்லை. 1 கிலோ ரூ.14 முதல் 20 வரை விலை போனாலும் கட்டுபடியான விலை இல்லை. இதனால் வாங்கிய கடனை அடைக்க முடியாத நிலை உருவாகி வருகிறது’ என்றனர்.

**மானியத்தில் சொட்டுநீர் விவசாயிகளுக்கு அழைப்பு**

ஆத்தூர் வட்டாரத்தில் சொட்டுநீர் பாசனம் மானியம் முறையில் அமைக்கப்பட்டு வருகிறது. விவசாயிகள் உடன் தொடர்பு கொள்ளலாம் என்று தோட்டக்கலை உதவி இயக்குநர் ஹெடிபாய் தெரிவித்துள்ளார்.தற்போது நீராதாரங்களில் நீரின் அளவு வெகுவாய் குறைந்துள்ளது. இதனால் நிலத்தடி

நீரும் குறைந்து வருகிறது. இந்நிலையில் விவசாயிகள் குறைந்த நீரை பயன்படுத்தி தொழில்நுட்ப அடிப்படையில் விவசாய பணிகளை மேற்கொள்வது சிறந்தது. இதற்கு சொட்டு நீர்ப்பாசனம் அவசியம். இதற்காக தேசிய நுண்நீர் பாசன திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசன மானியம் அளிக்கப்படுகிறது.இத்திட்டத்தில் பயன்பெற ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என்று உதவிஇயக்குநர் ஹெடிபாய் தெரிவித்துள்ளார்.

**பயிர் மேலாண்மை பண்ணைப்பள்ளி**

அழகர்நாயக்கன்பட்டியில் திண்டுக்கல் வட்டார வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை திட்டம் சார்பில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பண்ணைப்பள்ளி நடந்தது. வட்டார உதவி இயக்குநர் ராஜா வரவேற்றார். மாவட்ட துணை இயக்குநர் பாஸ்கரன் தலைமை வகித்து வேளாண்மை துறையின் செயல்பாடுகள், ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்து விளக்கி பேசினார்.வட்டார வேளாண்மை அலுவலர் போது மண்வள ஆய்வு, உழவியல் பராமரிப்பு குறித்தும், வேளாண்மை அலுவலர் மானிய திட்டங்கள் குறித்தும் விளக்கினர்.

அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராமகிருஷ்ணன் பயறு வகை சாகுபடி முறை பாரம்பரிய தொழில்நுட்பம் குறித்தும் இயற்கை முறையில் பூச்சி நோய் கட்டுப்பாடு மற்றும் உயிர் உர பயன்பாடு பற்றியும் செயல் விளக்கமளித்தனர்.அட்மா உதவி தொழில்நுட்ப மேலாளர் சிவக்குமார், அருண்குமார், உதவி வேளாண்மை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**நெற்பயிரில் பூச்சி நோய் தாக்குதல் கட்டுப்படுத்த உதவி இயக்குநர் ஆலோசனை**

வயல்களில் பூச்சிநோய்களை ஒழிக்கும் முறை குறித்து பழநி வேளாண் உதவி இயக்குநர் சாந்தாமணி விளக்கமளித்துள்ளார்.வயல்களில் பூச்சி நோய்கள்

ஏற்படாமல் இருக்க வயல் மட்டத்திலிருந்து வரப்பின் ஓரத்தில் சுமார் 3ல் 1 பங்கு உயரத்தில் தட்டைப்பயிறு விதைக்க வேண்டும். இந்த தட்டைப்பயிரில் நெற்பயிரை தாக்காத அசுவினி உற்பத்தியாகும். இதனால் ஏராளமான பொறிவண்டுகள் கவரப்படும். பொறி வண்டுகள் நெற்பயிரை தாக்கும் பலவிதமான சாறு உறிஞ்சும் பூச்சிகளை தாக்கி அவற்றை உண்டு கட்டுபடுத்தும். 1 ஹெக்டேருக்கு 3 கிலோ தட்டைப்பயிறு விதை தேவைப்படும்.

வரப்புகளை வெட்டி சுத்தம் செய்ய வேண்டும். வடிகால் வசதிகளை சரி செய்து தேவையான அளவு மட்டுமே நீர்கட்ட வேண்டும். தேவைக்கு அதிகமாக நீர் கட்டும்போது பூச்சிநோய் தாக்குதல் அதிகமாகும் என்பதால் தேவைக்கு ஏற்ப நீர்ப்பாய்ச்ச வேண்டும். 2 சதுர மீட்டருக்கு 1 குருத்து பூச்சியினுடைய முட்டைக்குவியல் காணப்பட்டால், டிரைக்கோகிரம்மா ஜப்பானிக்கும் முட்டை ஒட்டுண்ணிகள் 1 ஹெக்டேருக்கு 5 சிசி வீதம் விட வேண்டும்.

பூச்சிகளை கட்டுப்டுத்த கூடிய ஊன் விழுங்கிகளான நயாட்ஸ் எனும் தட்டான் பூச்சிகளின் இளம் பருவ பூச்சிகளை வயலில் சிறுதொட்டிகள் அல்லது குட்டைகளில் தண்ணீர் தேக்கி வைப்பதன் மூலம் இனம் பெருக செய்யலாம். தட்டான் பூச்சிகளின் நடமாட்டம் அதிகமாகக் காணப்படும் நேரத்தில் பூச்சிக்கொல்லிகளை தெளிக்கக்கூடாது.புகையான் பூச்சிகளை கட்டுபடுத்தக் கூடிய மைரிட் எனும் விழுங்கிகள் இல்லாத வயல்களில் அவற்றை கொண்டு வந்து விட வேண்டும். நெல் வயல்களில் நீர் தொடர்ந்து தேங்கி நிற்கும் இடங்களில் மீன்வளர்ப்பதால் பூச்சிகள் கட்டுப்படுத்தப்படுகிறது. கூடுதல் வருமானமும் கிடைக்கிறது. சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த கூடிய பிவேரியா மற்றும் மெட்டாரைசியம் போன்ற பூஞ்சாளங்களை உபயோகிக்கலாம். விளக்கு பொறிகளை அமைத்தும் நோய்ப்பூச்சிகளை அழிக்கலாம். விவசாயிகள் இதுதொடர்பான கூடுதல் விபரங்களுக்கு அந்தந்த பகுதி வேளாண் அலுவலர்களையோ, வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தையோ அணுகலாமென பழநி வட்டார வேளாண் உதவி இயக்குநர் சாந்தாமணி தெரிவித்துள்ளார்.

**பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்துவது எப்படி**

உளுந்து பயிரில் பூச்சி மற்றும் நோய் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் பற்றி சேதுபாவாசத்திர வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி விளக்கமளித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பு: உளுந்து பயிரை தாக்கும் பூச்சிகளில் தண்டு ஈ, அசுவினி, தத்துபூச்சி, வெள்ளை ஈ ஆகியன மிக முக்கிய பூச்சிகளாகும். தண்டு ஈ தாக்குதலால் செடிகள் முற்றிலும் காய்ந்து விடும். இதனைக் கட்டுப்படுத்த மானோகுரோட்டோபாஸ் மருந்தினை விதைத்த 7ம் நாள் 1 லிட்டர் தண்ணீருக்கு 2 மிலி என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். வளர்ச்சி பருவத்தின் போது தாக்கும் அசுவினி, தத்துப்பூச்சி, வெள்ளை ஈ ஆகியவற்றை கட்டுப்படுத்திட மீத்தைல் டெமட்டான் (அல்லது) டைமீத்தோயேட் (அல்லது) பாஸ்போமிடான் இதில் ஏதாவது ஒரு மருந்தை 2 மிலி யை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். வானிலையில் அசுவினியின் தாக்குதல் அதிகமாக தென்பட்டால் இதற்கு டைக்குளோர்வாஸ் 2 மிலி மருந்தினை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். நோய்களை பொருத்தமட்டில் மஞ்சள் தேமல் நோய், வாடல் நோய், வேர் அழுகல் நோய், சாம்பல் நோய் ஆகியன முக்கியமானவையாகும். மஞ்சள் தேமல் நொய் தென்பட்டால் உடனே பயிரை பிடுங்கி அப்புறப்படுத்த வேண்டும். வாடல்நோய் மற்றும் வேர் அழுகல் நோய் தாக்குண்ட செடிகளை பிடுங்கி அகற்றி அந்த இடத்தில் பாவிஸ்டின் 10 கிராம் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கரைத்து செடி பிடுங்கிய இடத்தில் கரைசலை ஊற்ற வேண்டும். இதனால் நோய் பரவாமல் தடுக்கலாம். சாம்பல் நோய் தென்படும் இடங்களில் 1 லிட்டர் தண்ணீரில் நனையும் கந்தகத்தூள் 10 கிராம் மருந்தை கரைத்து தெளித்து கட்டுப்படுத்தலாம். இவ்வாறு வேளாண்மை உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

**மான்ய விலையில் பவர்டில்லர்**

பட்டுக்கோட்டை அடுத்த திருவோணம் வட்டார வேளாண்மைத்துறை சார்பில் விவசாயிகளுக்கு பவர் டில்லர் வழங்கும் நிகழ்ச்சி வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடந்தது. திருவோணம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் ராமாமிர்தம்ராஜமாணிக்கம் தலைமை வகித்தார். வேளாண்மை உதவி

இயக்குநர் மதியரசன் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் பயனாளிகள் பின்னையூர் மேனகா, தெற்குகோட்டை சரஸ்வதி, சோழகன்கரை பழனிச்சாமி ஆகியோருக்கு தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் தலா ரூ.75 ஆயிரம் மான்ய விலையிலான காம்கோ பவர்டில்லர் கருவிகளை ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் ராமாமிர்தம்ராஜமாணிக்கம் வழங்கினார். நிகழ்ச்சியில் ஒன்றியக்குழு உறுப்பினர் சிவராஜ், வேளாண்மை அலுவலர் முருகேசன், உதவிவிதை அலுவலர் முருகையன், மெக் ஆட்டோமொபைல் நிறுவன தொழில்நுட்ப மேலாளர் கண்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர்கள் சரவணன், அசோகன், அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் மேனகா, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ரெத்தினம், நெடுஞ்செழியன் ஆகியோர் செய்திருந்தனர்.